**செய்தி வெளியீடு எண்: 118** **நாள்: 11.02.2020**

**செய்தி வெளியீடு**

சென்னை – 32, கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தொகுதி–IV தேர்வுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளை செவித்திறனற்ற மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கென பிரத்யேகமாக பிப்ரவரி 15, 2020 முதல் வாரந்தோறும் சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் (குறைந்த பட்ச கல்வித்தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி) மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 14.02.2020 க்குள் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம் என வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் திரு.V.விஷ்ணு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

<u>முகவரி மற்றும் தொலைபேசி எண் :</u>

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
A28 , முதல் தளம், டான்சி கார்ப்பரேட் தலைமை அலுவலகம்,
கிண்டி, சென்னை – 32.
Ph No: 044 - 22500134

இயக்குநர் மற்றும் முதன்மை செயல் அலுவலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**